★ ★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
The EELANADU

மலர்: 20 ஐப்பசி 30 ஜுல்ஹஜ் 14 இதழ்: 276
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 16-11-78

யாழ்ப்பாணம்

## மின்சார சீர்கேடு குறித்து பிரதமருக்கு அவசரத் தந்தி

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் மின்சார சீர்கேடு குறித்து யாழ் மின்சார பாவனையாளர்கள் பிரதமர் திரு. ஆர் பிரேமதாசாவுக்கு தந்திமூலம் முறையிட்டுள்ளனர்.

ஸ்தலஸ்தாபன அமைச்சரும் பிரதமருமான திரு. ஆர் பிரேமதாசாவுக்கு யாழ் மின்சார பாவனையாளர்கள் நேற்று அனுப்பிவைத்துள்ள அவசரத்தந்தியில், யாழ்ப்பாணத்தில் அடிக்கடி ஏற்படும் மின்சாரசீர்கேட்டினால் மின் பாவனையாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவதுடன் கைத்தொழில், வர்த்தகநிலையங்களும் பெரிதும் பாதிக்கப்படுகின்றன என்றும் பல சந்தர்ப்பங்களில் தொடர்ச்சியாகப் பலமணி நேரத்துக்கு மின்தடைப்பட்டுவிடுகிறது என்றும் யாழ்ப்பாணம் இருளில் மூழ்கும் சந்தர்ப்பம் பார்த்து [illegible] திருட்டுச்சம்பவங்களும் நடைபெற்றுவிடுகின்றன என்றும் இந்த அவலநிலை குறித்து உடன்டியாக நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளனர். இத்தந்தியில் முப்பது பேர் கையெழுத்திட்டுள்ளனர்.

PERIODICALS DIVISION LIBRARY

அரச, கூட்டுத்தாபன, உள்ளூராட்சி, தனியார்துறைகளில்

# சகல ஊழியர்களுக்கும் 10 வீத சம்பள உயர்வு

## அரிசி, சீனி, மா விலையில் மாற்றம் எதுவுமில்லை

### நிதியமைச்சரின் 'பட்ஜட்' உரை

(கொழும்பு)

**சாதாரண மக்களின் அத்தியாவசியப் பாவனைப் பொருட்களான அரிசி, மா, சீனி, மண்ணெண்ணெய் போன்றவற்றில் கைவைக்காமலும், மதுபானம், சிகரெட், பீடி விலைகளை அதிகரிக்காமலும் தமது வரவு-செலவுத் திட்ட யோசனைகளை நிதி திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டிமெல் நேற்றுப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.**

அரசாங்க, உள்ளூராட்சி மற்றும் இத்துறைகளில் ஓய்வூதியம் பெறுபவர்களும் மாதம் 50 ரூபாய் சம்பள உயர்வு பெறும் வகையில் 10 விதச் சம்பள உயர்வை நிதியமைச்சர் அறிவித்தார். இச்சம்பள உயர்வு கூட்டுத்தாபன, தனியார்துறை ஊழியர்களுக்கும் கிடைக்கும் என்று அமைச்சர் அறிவித்தார். இத்திட்டம் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்.

அரசாங்க ஊழியர்களின்பிரயாணம், உணவு படிகளில் சலுகைகள்வழங்கும் விதத்தில் திருத்தம் கொண்டுவரப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

திரு. ஜே. ஆர் ஜயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசின் இரண்டாவது வரவு செலவுத்திட்ட உரையை நிதித்திட்டமிடல் அமைச்சர் திரு ரொனி டீ நேற்று பிற்பகல் 2-05 மணிக்கு ஆரம்பித்துமாலை 6-47 மணிக்கு முடித்தார் இடையில் அரை மணி நேரம் தேநீருக்காக சபை ஒத்திவைக்கப்பட்டது

அமைச்சர் மிக உற்சாகமாகவும், இடைக்கிடையே நகைச்சுவை ததும்பவும் டியும் எறத்தாழ 5 மணி நேரம் தமது உரையை நிகழ்த்தினர்

நிதி திட்டமிடல் அமைச்சர் நிகழ்த்திய வரவு-செலவுத் திட்ட உரையில் முக்கிய சில அம்சங்கள் வருமாறு:

அரசாங்க சேவையாளர்களின் உத்தியோகபூர்வ வேதன வருமானத்துக்கு வரி விலக்கு அளிக்கப்படும்.

**தனியார்துறை ஊழியர்**

மாதம் 50 ரூபா சம்பள உயர்வு கிடைக்கக்கூடியதான 10 வீத சம்பள உயர்வு கூட்டுத்தாபனங்கள், தனியார் துறை ஊழியர்களுக்கும் கிடைக்கும்.

வரி அமைப்பு முறை முற்றாக மாற்றி அமைக்கப்படும்

**தர்மப்படி அதிகரிப்பு**

நடைமுறை வங்கிக் கணக்குகளுக்குப் பற்றுவரி இருக்காது.

தர்மப்படி அதிகரிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாதம் 9 ஆயிரம் ரூபாய் வருமானம் பெறும் பணியாளர் வருமான வரியிலிருந்து விலக்குப் பெறுவர். கணவன் மனைவி இருவரும் வேலைசெய்தால் கணவன் அல்லது மனைவி 9 ஆயிரம் ரூபாய் வரை வரி விதிப்பிலிருந்து விலக்குப் பெறுவார். எனினும் பணியாளர் அல்லாத விடயத்தில் தனிப்பட்ட ஒருவருக்கு வரி விலக்கு எல்லை 6 ஆயிரம் ரூபாய் ஆகும். கணவன், மனைவி 3 பிள்ளைகள் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு வரி விலக்கு உச்ச எல்லை 8 ஆயிரம் ரூபாயாகும்.

இந்த வரிச் சலுகை சுயதொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும், பிற வரியிறுப்பாளர்களுக்கும் இல்லை. கணவன், மனைவி இருவர் வருமானமும் எதுவாயிருந்தாலும் தனித்தனியே கணக்கிடப்படும் 18 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளின் வருமானம் தந்தையின் வருமானத்தில் சேர்க்கப்படும் கணவன் மனைவி பிரிந்திருப்பின் பிள்ளைகளுக்கு பொறுப்பாய் இருப்பவர்களின் வருமானத்துடன் அவர்களின் வருமானமும் சேர்க்கப்படும்.

**முதலீடுகளுக்கு சலுகை**

உள்நாட்டுச் சேமிப்புகளில் முதலீடு செய்கிறவர்களுக்குச் சலுகைகள் வழங்கப்படும்.

**வீடு கட்டுவதற்கு**

வீடமைப்புக்கான முதலீட்டு நிவாரணத் திட்டம் எளிதாக்கப்படும்.

தேசிய வீடமைப்பு ஆணையாளரிடமிருந்து அல்லது ஒரு

(6-ம் பக்கம் பார்க்க)

## தனியார் துறையினர் தவறினல் நடவடிக்கை

(கொழும்பு)
சம்பள உயர்வுத் திட்டத்தைத் தனியார் துறையினரும் அமுல் நடத்தவேண்டும் என்றும தவறினல் இது குறித்து அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் நேற்று இரவு பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் நிதி அமைச்சர் தெரிவித்தார்.

சம்பள உயர்வு தோட்டத் தொழிலாளருக்கும் வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார். ஆனல் சம்பள நிர்ணய சபை கூடி இதைத் தீர்மானிக்கும் என்ருர்.

வீடுகட்டுவோருக்கு வழங்கப்படும் சலுகைகளை ஏற்கனவே இருக்கும் சட்டங்கள் பாதிக்காதவண்ணம் பிரதம மந்திரி சபையில் புதிய சட்டம் ஒன்றைக் கொண்டுவர விருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ம)

வரணி கொலைச் சம்பவம்

## 1-வது சந்தேகநபர் பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)
வரணி கொலைச் சம்பவம் தொடர்பாக முதலாவது சந்தேக நபரான க முருகேசு 1000 ரூபா பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

சாவகச்சேரி பதில் நீதவான் திரு. எஸ் கே திரவியநாயகம், அப்பில் நீதிமன்ற அனுமதிப்படி முதலாவது சந்தேக நபரை பிணையில் செல்ல அனுமதித்தார்.

இக்கொலைச் சம்பவம் தொடர்பாக, ஏற்கனவே ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்தவர்களில் 4 சந்தேக நபர்கள பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

மற்றும் சந்தேக நபர்கள் தொடர்ந்து ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். (க)

## வவனியாவில் இளைஞர் பேரவைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)
தமிழ் இளைஞர் பேரவையின் மூன்ருவது பகிரங்க கூட்டம் இம்மாதம் 26-ம் தேதி வவனியா நகரசபை மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில் தமிழ் இளைஞர் பேரவை அமைப்பு செயலாளர்திரு த சந்ததியார் மற்றும் வவனியா இளை உறுப்பினர்கள் தற்போதைய போக்குபற்றி உரையாற்றுவார்கள்.

தமிழ் இளைஞர் பேரவையின் முதலாவது பகிரங்க கூட்டம் யாழ்ப்பாணத்திலும் பின் மட்டக்களப்பிலும் நடைபெற்றது.

திருமலை மன்னர் முல்லைத்தீவு ஆகிய இடங்களிலும் கூட்டங்களை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது (க)

## "அமிர்" தமிழில் சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)
தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு அ. அமிர்தலிங்கம் நேற்று நண்பகல் பாராளுமன்றத்தில் தமிழில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

பட்டிருப்பு எம். பி. திரு பூ. கணேசலிங்கம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை சத்தியப்பிரமாணம் செய்வார் எனத் தெரிகிறது. (ம)

## 'பட்ஜட்' விபரம்

நிதியமைச்சர் நேற்று பாராளுமன்றத்தில் நிகழ்த்திய உரையின் முழு விபரமும் "ஈழநாடு" நாளை ஏட்டில் வெளியிடப்படும் என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிருேம்.

வரவு செலவுத் திட்ட உரையின் மீதான விவாதம் எதிர்வரும் 21ம்திகதி ஆரம்பமாகும்.

## “சாவகச்சேரித் தொகுதி அபிவிருத்தித் திட்டம்: 10கோடி ரூபா செலவில்

# வெளிநாட்டு உதவியுடன் அமையும்”

### கருத்தரங்கில் எம்.பி. தகவல்

(மட்டுவில்)

“சுமார் 10கோடிரூபா செலவில் வெளிநாடுகளின் உதவியுடன் சாவகச்சேரித் தொகுதிக்கு அபிவிருத்தித் திட்டங்கள் பத்தாண்டு திட்டமாக அமையும் இத்தொகுதி பொருளாதாரத் துறையில் உயர்வடைந்து ஒருமுன்னேடித் தொகுதியாக அமைய வேண்டும்.”

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் அவரது இல்லத்தில் நடத்த சாவகச்சேரித் தொகுதி அபிவிருத்திக் கருத்தரங்கில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுமார் 5 மணி நேரம் நடைபெற்ற இக்கருத்தரங்கிற்கு சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் தலைமை தாங்கினார். தென்மராட்சிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். முருகவேள் கருத்தரங்கை ஆரம்பித்துவைத்தார்.

இலங்கைப் பல்கலைக்கழகப் புவியியல்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி சோ. செல்வநாயகம், திட்டமிடல் அமைச்சின் பிரதிப்டணிப்பாளர் திரு. லோகேஸ்வரன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பனந்தொழில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அரச அலுவலகங்களின் உயர் அதிகாரிகள், தனியார்துறைப் பிரமுகர்கள், இலங்கைப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் செல்வி இராஜரத்தினம் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் தமது தலைமை உரையின்போது கூறியதாவது:

“நாம் இத்தொகுதியின் அபிவிருத்தியை ஆராய்ச்சி அறிஞர்களின் ஆலோசனையின் படி சுமார் 10 கோடி ரூபா நிதி அடிப்படையில் செய்ய திட்டமிட்டுள்ளோம். இந்த அபிவிருத்தியில் விவசாயம், கைத்தொழில், பெருந்தொழில் சுகாதாரம், வீட்டு வசதி, காணி வசதி, வேலை வாய்ப்பு ஆகிய அத்தியாவசிய அம்சங்கள் அனைத்தும் அடங்கும்.

#### மழைநீர் வீணாகிறது

இன்று நமது தொகுதியில் பெய்யும் மழையில் 30 விகிதம் கடலில் செல்கிறது. இப்படியான பல அம்சங்கள் எங்கள் அபிவிருத்திக்குத் தடையாக உள்ளன. இலங்கைப் பல்கலைக்கழக ஆராய்ச்சித்துறைப் பேராசிரியர்கள்தான் இதற்குத் தகுந்த ஆலோசனைகள் கூறுவார்கள். அவர்களின் ஆலோசனையைப் பெற்று அதன்படி செய்வதின்மூலமே நாம் சிறந்த அபிவிருத்தியைப் பெறமுடியும். ஆகவேதான் ஆராய்ச்சியாளர்களையும் இக் கருத்தரங்கிற்கு அழைத்துள்ளேன்.

#### புள்ளி விபரங்கள்

உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். முருகவேள் தமது ஆரம்பஉரையில், இத்தொகுதியின் விவசாயம் அதில் நெல், உபஉணவுப் பொருள் ஆகியவற்றின் கடந்த ஆண்டுகளில் நிகழ்ந்த நிலப்பரப்பின் புள்ளி விபரங்களையும், விலங்கு வளர்ப்பின் புள்ளிவிபரங்களையும் விளக்கமாகக்கொடுத்தார்.

பேராசிரியர் தி [illegible] செல்வநாயகம் பேசுகையில் கூறியதாவது: இந்த ஆராய்ச்சிகளைச் செய்து நாட்டின் அபிவிருத்தியை உயர்த்த உதவியளிப்பதில் மகிழ்சியடைகிறேன் எங்கள் முந்திய ஆராய்ச்சியின் படிக்கு யாழ் குடாநாட்டிலே சுண்ணக்கற்கள், மணல் கரையோரப் பகுதிகளில் கடற்கழியும் காணப்பட்டது. மழைநீர் மணல் வழியாகக்கீழ் இறங்கி, பாதாள அருவிமூலம் கடலையடைகிறது.

ஆகவே பாதாள அருவிகளை ஆராய்ந்து கண்டுபிடித்து அதை அணைபோட்டுத் தடுக்க வேண்டும். இதைவிட விவசாயிகள் இலை, குழை, பசளை போடவேண்டும். மேலும் இப்பகுதிகளிலுள்ள உவர்நீர் ஏரிகளை நன்னீர்ப் பகுதிகளாக மாற்றுவதன்மூலம் 30,000 ஏக்கர் விவசாய நிலம் நமக்கும் கிடைக்கலாம். இங்கு விவசாயம், கைத்தொழில், இதைவிட தமிழ்நாட்டைப் போன்று விலங்கு வளர்ப்பு-சினுவின் அனுபவத்தைப் பின்பற்றி மீன் வளர்ப்புப்பண்ணைகள் உப்பை உபயோகித்து செய்யும் தொழிற்சாலைகள், கண்ணாடித் தொழிற்சாலை நிறுவவும் வாய்ப்புண்டு. நாம் இப்படியாக வளங்களைப்பயன்படுத்து எமது இந்த நாட்டை விரைவில் அபிவிருத்தி செய்யத் தவறினால் எதிர்காலத்தில் விறகு - குடி நீர் இறக்குமதி செய்யவேண்டிய சூழ்நிலை ஏற்படலாம்.

திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு. லோகேஸ்வரன் பேசுகையில் கூறியதாவது: நமது அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்தும் போது, மக்கள் ஒரு களியாட்ட நிகழ்ச்சியைப் பார்ப்பது போன்ற நிலையில் இருக்கிறார்களே தவிர எமது அபிவிருத்தி என்று உழைப்புக் கொடுக்க வேண்டும் என்ற நிலையில் இல்லை. அந்தமனோ நிலைவளர வேண்டும். ஆராய்ச்சிப் பேராசிரியர்கள் தமது ஆராய்ச்சிக்கு வேண்டிய கேள்விக்கொத்துகளைத் தயாரித்துக் கொடுத்தால் அதற்கு இணங்க தேவையான புள்ளி விபரங்களை பாடசாலைமாணவர்களைக் கொண்டு சேகரிக்க முடியும். அப்படிச் செய்வதின் மூலம் திட்டம் விரைவில் நடைபெற வசதியளிக்கும்.

விஞ்ஞன ஆராய்ச்சியாளர் திரு. க. சச்சிதானந்தம் உட்பட பலர் உரை நிகழ்த்தினார்கள் விரைவில் ஆய்வு வேலை ஆரம்பிடபது என்றும் இதற்கு பல்கலைக்கழக பேராசிரியர் மாணவர் ஆகியோரைப் பயன்படுத்துவ

(5-ம் பக்கம் பார்க்க)

---

சாவகச்சேரி நகரசபை

இறைச்சிக்கடைகள், காலைக்குத்தகை ஆகியவற்றுக்கான

## கேள்வி அறிவித்தல்

1-1-1979 முதல் 31-12-79 வரையிலான காலப்பகுதியில் கீழ்க்குறிப்பிடப்படும் இறைச்சிக்கடைகளில் வியாபாரம் நடாத்தும் உரிமையின் குத்தகை, காலைக்குத்தகை ஆகியவற்றுக்கான முத்திரையிடப்பட்ட கேள்விகள் இரு பிரதிகளாக 30-11-78 மு. ப. 10-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அட்டவணை

| வியாபாரம் | கடை இல: | 1978ம் ஆண்டு ஏற்றுக் கொண்ட தொகை | கேள்வி வைப்பு பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. மாட்டிறைச் சிக்கடை, சந்தை எல். கியூ. சாவகச்சேரி. | 1 | ரூ. 14776. 76 | ரூ. 150-00 | ரூ. 15-00 |
| 2. மாட்டிறைச் சிக்கடை, சந்தை எல். கியூ. சாவகச்சேரி. | 2 | ரூ. 11376. 76 | ரூ. 150-00 | ரூ. 15-00 |
| 3. வண்டி வான் காலைக்குத்தகை | | ரூ. 1800. 00 | ரூ. 100-00 | ரூ. 10-00 |

மேற்படி வைப்புப்பணமும் கேள்விப்படிவக் கட்டணங்களும் செலுத்தப்படுவதன்பேரில் 28-11-78 நண்பகல் 12-00 மணிவரை வழங்கப்படும் படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல்வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் திருப்பித்தரப்படமாட்டா. சித்திகரமான கேள்விக்காரர்கள் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டதும் கேள்விவைப்புப்பணம் திருப்பித் தரப்படும். கேள்வி வைப்புப்பணமும் படிவக்கட்டணமும் ரொக்கமாகச் செலுத்தப்படவேண்டும்.

முறைப்படி கேள்விப்படுத்தப்பட்ட கேள்விகள் இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் சேர்க்கப்படலாம். அல்லது பதிவுக்கடிதம் மூலம் அனுப்பப்படலாம். எந்த வியாபாரத்திற்கு கேள்வி விடுவிக்கப்படுகிறது என்ற விபரம் கேள்விகள் அனுப்பப்படும் கடிதஉறையின் இடதுமேல்மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்படவேண்டும். எந்தவொரு காரணமும் காட்டாது கேள்விகள் அனைத்தையுமோ எவற்றையேனுமோ ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை சாவகச்சேரி நகரசபை விசேடஆணையாளருக்குண்டு 1978ம் ஆண்டிற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகைக்குக் குறைந்த கேள்விகள் பரிசீலனைசெய்யப்படமாட்டாது.

மேலதிக விபரங்களை இந்த அலுவலகத்தில் அலுவலகநேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

த. நவரத்தினராசா
விசேட ஆணையாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி, 13-11-78. (0799)

---

## கீழ்க்காணும் வாகனங்கள் விற்பனைக்குண்டு

22 SRI 6293 மொறிஸ்
22 SRI 621 ”
22 SRI 3572 ஒஸ்றின்

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-
முகாமையாளர்,
த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்,
191, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

வாகனங்களைப் பார்வையிட ஒழுங்குசெய்து தரப்படும். கேள்வி விண்ணப்பங்கள் 25-11-1978வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

---

## வரி விளம்பரம்

FOR SALE

SDT-2680 HITACHI Stereo Music Cenler Three in one. T. Kanapathippillai Hospital Lane Thuppu, Atchuvely. 0790

### தேவை

ஐந்து வருட அனுபவமுள்ள விற்பனையாளர்கள் தேவை. இருபாலாரும் நேரில் விண்ணப்பிக்கவும். க. நாகமுத்து அன் சன், 48-50, பெரிய கடை, யாழ்ப்பாணம். 0791

மருதனாமடம் எரிபொருள் நிலையத்திற்கு பம்பேஸ் தேவை. தகைமைகளுடன் தபால் மூலம் விண்ணப்பிக்கவும். எரிபொருள் நிலையம், மருதனாமடம், சுன்னாகம். 0796

### அறிவித்தல்

புத்தூர், ஆவரங்கால், மார்க்கட் ஒழுங்கையில் வசிக்கும் செல்வி சாந்தநாயகி செல்வநாயகம் என்பவர், தமக்குச் சொந்தமான 1471 தொடக்கம் 1474 வரை இலக்கங் கொண்ட நாலு பங்குகளுக்குரிய 62ம் இலக்கங் கொண்ட பங்குப் பத்திரத்தை இழந்து விட்டதாகவும் தமக்குப் பிரதி பங்குப் பத்திரம் வழங்குமாறும் விண்ணப்பித்துள்ளார்.

இன்று தொடக்கம் ஒரு வாரத்திற்குள் தகுந்த காரணம் காட்டி மறுப்புத் தெரிவித்தாலன்றி, இந்த ஸ்தாபனத்தின் இயக்குநர் சபை பிரதி பங்குப்பத்திரம் வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை இத்தால் அறியத் தருகிறோம்.

இயக்குநர் சபை ஆணைப்படி

சமுத்திரா ட்றேட்ஸ்
லிமிட்டெட்
சு. செபஸ்தியாம்பிள்ளை,
நிர்வாக இயக்குநர்.

23/2, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். 16-11-78.

### பஸ்சேவை விஸ்தரிப்பு

(பண்டத்தரிப்பு)

காரைநகரிலிருந்து பண்டத்தரிப்பிற்கூடாக காங்கேசன்துறை வரை நடைபெற்று வந்த பஸ் சேவையை காரைநகர் இ போ ச டிப்போவினர் பலாலிவரை கடந்த வாரம் தொடக்கம் விஸ்தரித்துள்ளனர்.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, பலாலி விமான நிலையம் ஆகியவற்றிற்கு செல்லுபவர்களின் வசதியை முன்னிட்டு இச் சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது. (உ)

---

## அர்ச்சகர் தேவை

காரைநகர் புளியங்குளம் அருணனந்தப் பிள்ளையார் கோவிலுக்கு நித்தியபூஜைக்குஅர்ச்சகர்தேவை. சகலவசதிகளும் செய்து கொடுக்கப்படும். விபரங்களுக்கு கடித மூலம் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: ஷி. கோவிற் தனுதிகாரி N. நடராஜா மூல்லைப்பிலவு காரைநகர். 0800

---

## முதலாவது நினைவாஞ்சலி

வயிரமுத்து சபாபதிப்பிள்ளை

தோற்றம் 18-10-38 மறைவு 28-10-77

நெஞ்சைவிட்டகலாக் குஞ்சரமே!
நிலையான மனமின்றி நீர்பிரிந்தீ ரெப்மை
மலையான எம்மனசு அலைபோல ஆச்சு!
விலைகூறும் பொருளல்ல உமதாவி எமக்கு!
நிலையான பிறவியின் நிலையெய்தல் வேண்டும்!
(பிரார்த்தனை)

தந்தைதாய் - சகோதரர் - சகோதரிகள் - மருமக்கள்
பெருமக்கள் மற்றும் உறவினர்
சிவன்கோவில் றோட், மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. 0792

# பழையநினைவில் இரசிகமணி உதயம்

(இரசிகமணி கனக. செந்திநாதனின் ஓராண்டு நினைவுதினம் இன்றாகும். யாழ். இலக்கிய வட்டத்தின் ஸ்தாபகரான இரசிகமணியின் நினைவு தினக் கூட்டமும் யாழ். இலக்கியவட்டத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் இன்று பிற்பகல் காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறுகின்றன.)

"அன்னையே போல அருந்
தமிழை ஆதரித்த
பொன்னையா விண்ணுலகம்
போயினனே-மன்னு
புகழ்ப்
பாவலர் நாவலர் பத்திரிகை
ஆசிரியர்
யாருந் தேடியழ இங்கு"
—தேசிகவிநாயகம்பிள்ளை
பாடல்.

அண்மையில் ஒரு சில தினத்துக்குமுன் தேசியவிநாயகம் பிள்ளையின் "மலரும் மாலையும்" என்ற பாடல்களின் தொகுப்பு ஒன்று, தேடாமலே தற்செயலாகக் கைக்கெட்டியது. அதில்வரும் மேற்படி பாடல், முன்பு நான் கண்டு கேட்டறியாதது. அதனைத் திருப்பித் திருப்பிப் படித்தேன்.

படிக்கப் படிக்க, மறந்து மறைந்துபோன பழைய நினைவுகள் அரைகுறையாய் எழுந்து விளையாடின.

●

கல்கி ஆசிரியரும், ஈழகேசரி (திரு, நா பொன்னையா அவர்கள்) ஆசிரியரும் கைகோத்த படி காட்சியளித்தார்கள்.

கல்கி, டி. கே. சி என வழங்கும் இலக்கிய ரசிகரான சிதம்பரநாத முதலியாரைக் கண்டுபிடித்து, அவருக்கு 'இரசிகமணி' என்ற பட்டஞ் சூட்டி மகிழ்ந்த காலத்தில். டி கே. சி. தேசிகவிநாயகம் பிள்ளை பாடல்களில் தம்மைப் பறிகொடுத்த நிலையிலிருந்தார்.

குறித்த பாடல்களில் புலியைப்பற்றிய பாடலில்,

"வாலை முறுக்குது பார்-
வால் நுனி
வட்டஞ் சுழலுது பார்"

என்ற பாடலுக்கு விமரிசனம் நடந்துகொண்டிருந்தது. விமரிசனம் கல்கியால் ஆனந்தவிகடன் ஆண்டுமலரில் வெளியிடப்பட்டது.

●

புலிவாலைக் கண்ணுற்ற ஈழகேசரி ஆண்டுமலர், சோமசுந்தரப்புலவரின், கத்தரித் தோட்டத்து மத்தியில் காவல் புரிகின்ற வெருளியைக் கண்டு வெருக்கொண்டு,

**இலக்கிய கலாநிதி, பண்டிதமணி**
**சி. கணபதிப்பிள்ளை**

"வாட்டமில்லாப் பயிர்
மேயவந்த பசு
வாலைக் கிளப்பிக்கொண்
டோடுதே-வெடி
வாலைக் கிளப்பிக்கொண்
டோடுதே"

என்ற பாட்டிலோடும் மாட்டுவாலை விமரிசனம் பண்ணி,

வாலைக் கிளப்பிக்கொண்டோடுவதன் முன், டி. கே. சி. யின் புலியின் கதியென்னகும்! எனப் பரிவு கூர்ந்து.

இருவால்களையுந் தொட்டுப் பார்த்து, புலிவாலைப் பாவம்; பூனைவால் செய்துவிட்டது.

●

ஈழகேசரி ஆண்டுமலர், டி. கே. சிக்குக் கிடைத்தது. அடுத்து ஈழகேசரி ஆசிரியர் சந்திப்பும் அமைந்தது.

டி. கே சி. தம் புலிவாலை மறதி செய்து, சோமசுந்தரப் புலவரின் பாடல்களைச் சுவைக்க வாயூறினர்.

டி கே. சி யின் களங்கமற்ற இரசனை உள்ளம் இருந்தவாறு:

●

கல்கி ஆசிரியர் சோமசுந்தரப்புலவரின் இலங்கை வளத்தை விமரிசனம் செய்தது சிந்திக்கத்தக்கது

ஈழகேசரி ஆண்டுமலர் தேசிகவிநாயகப்பிள்ளைக்கும் கிடைத்திருக்கும் என்பதிற் சந்தேகமில்லை.

●

திருவாளர் நா. பொன்னையா அவர்கள் நிறுவிய சன்மார்க்கசபையும், ஈழகேசரிக் காரியாலயமும், தமிழ் நாட்டு நல்லறிஞர்கள், கலைஞர்கள், இரசிகர்கள், எழுத்தாளர் அனைவர்க்கும் சொந்த இடங்களாயின. இரண்டும் இரு பெருஞ் சேதுபந்தனங்கள்.

●

சம்பவம் இங்ஙனமாக, அப்போது இரு பெருஞ் சேதுபந்தனங்களையும் இறுகக் கட்டியணைத்துக்கொண்டு மிருதுவான தேகம் படைத்த இளைஞர் ஒருவர், இலக்கிய இரசனைகளில் ஈடுபாடுற்று. தம்பாட்டில் முழுகித் திளைத்துக்கொண்டிருந்தார். கூடிச் சுவைக்க ஆளில்லாத சமயங்களில் தாமே சுவைத்துச் சிரித்துக் களிப்பார்.

மது அருந்துபவர்களைக் கால அடைவில் மது அருந்திவிடுகின்றது. அவ்வாறே மேலே குறிப்பிட்ட இளைஞரை இலக்கிய ரசனை முற்றும் விழுங்கி விட்டது.

●

இ—அந்த இளைஞரே மறைந்த ரசிகமணி

அவரது புகழுடம்பு இன்று எங்கும் காட்சியளிக்கின்றது வானொலியில் அவர் புகழ் ஒலிக்கின்றது பத்திரிகைகள் பாராட்டுகின்றன. கவிஞர்கள் பலதுறை எழுத்தாளர்கள், விமரிசகர்கள் விரிவுரையாளர்கள் மனமுருகிப்போற்றுகின்றார்கள். கேடக்கேட்க மகிழ்ச்சி பொங்குகின்றது.

அவரது ஆத்மா சாந்தி உறுக. (அ)

## நயத்துக்கோர் இரசிகமணி

ஈழத்து இலக்கிய வானில் முழுமதியாகப் பிரகாசித்த இரசிகமணியின் பூதவுடலை இன்று நாம் காண முடியாது. ஆனல் அவர்படைத்த இலக்கியச் செல்வங்கள் என்றும் அழியாவரம் பெற்றுள்ளன. பிரமன் படைத்த படைப்புக்கள் அழிவன! ஆனல் கவிஞர்கள் படைப்புகள் என்றும் நின்று நிலவுவன என்றார் குமரகுருபரர். எங்கள் இரசிகமணி ஆபூர்வ மனிதர். சுவைத்துச் சுவைத்து இலக்கியங்களை ஆய்ந்தவர். அவருடைய உதிரத்தோடு ஒன்றிவிட்டது திறனாய்வு. இயல, இசை, நாடகம் ஆகிய முத்தமிழிலும் புலமை மிக்கவர் இரசிகமணி பண்டித இலக்கியங்கள் தொடக்கம் பாலர் இலக்கியங்கள் வரை இரசிகமணிக்குக் கைவந்த சொத்து. பாடுவார் விளையாடுவார் நயப்பார் எழுதுவார் இசைப்பார் நல்லுறுதி கூறுவார். இத்தனைக்கும் மேலாக அவரிடம் காணப்பட்ட சிறப்பியல்பு ஈழத்து இலக்கிய கர்த்தாக்களைக் கைதூக்கி விட்ட மாண்பு பலருக்கு முற்றத்து மல்லிகை மணம் தெரிவதில்லை. ஆனல் அடுத்த வீட்டுப் பட்டிப் பூவுக்கு மணமுண்டு குணமுண்டு என்று சாட்டுவதில் ஆர்வங் காட்டுகின்றனர் இந்தநிலைக்கு முழு எதிர்ப்பாக விளங்கியவர் இரசிகமணி

எவரெவர் இலக்கியப்பணியில் கால் வைக்கிறரோ அவரவரை ஊக்குவித்தபெருந்தகை அவர்

அத்தகையோரை தமிழ்கூறு நல்லுலகம் மறக்கவுமாமோ முடியாது என்றும் அவர் ஏற்றி வைத்த இலக்கியச் சுடர்கள் ஈழத்து வானுக்கு அணிசெய்யும் என்பதில் மிகையொன்றுமில்லை அ)

## பாராட்டுத் தந்திகள்
(கம்பளை)

அகில இலங்கை தேசிய பாடசாலைகளுக்கிடையேயான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியில், கம்பளை சாஹிராக் கல்லூரியம் கொழும்பு றேயல் கல்லூரியும் மோதிக்கொண்டதல் சாஹிரா கல்லூரி ஐந்த கோல்களையும், கொழும்பு றேயல் கல்லூரி நான்கு கோல்களையும் போட்டு சாஹிரா கல்லூரி வெற்றி பெற்று வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்துக் கொடது

வெற்றியைப் பாராட்டி நாட்டின் நாலாபக்கங்களிலுமிருந்தும் சாஹிராக் கல்லூரிக்கு பாராட்டுத் தந்திகள் குவிந்துள்ளனர்.

## மாரியே மறைந்தோராண்டு

இலக்கியம் வளர்த்தார்! நல்ல
இரசனையில் திளைத்தார்! அன்பு
துலக்கியே துணையாய் நின்றார்!
சுவையுறும் உரைகள் செய்தார்!
கலைத்திடம் கொண்ட ஞானக்
கண்ணினால் உலகைக் கண்டார்
நிலைத்திடும் புகழே பெற்ற
நேசரே செந்தில் நாதன்!

தாயென நின்றார்! ஞானத்
தந்தையாய்ச் சார்ந்து நின்றார்!
வாயுரை செயலாக் கஞ்சேர்
வாத்தியாய் வளர்ந்தே நின்றார்!
தூயநற் சைவ மார்க்கத்
தொண்டிலே துணையாய் நின்றார்!
நேயராம் கனக செந்தி
நிறைநாத னெனவே நின்றார்!

ஆசிகள் கூறி நின்றார்!
அணிந்துரை அளந்து நின்றார்!
வாசினை வளமுற் றேங்கும்
மணிமொழி நூலாய் நின்றார்!
ஆசிரி யத்தின் செம்மை
அணிதனில் முதலாய் நின்றார்!
நேசரே கனக செந்தி
நிறைநிலா வென்ன நின்றார்!

அரங்கினி லேறி நின்றார்!
அருள்நெறி அறியும் ஞான
வரம்பினில் மணியாய் நின்றார்!
வாக்கினில் வாணி வந்தே
பொருந்திடப் புலமை பெற்றே
பகட்கொடி நாட்டி நின்றார்!
கருமமே கண்ணாய்ப் போற்றும்
கனகசெந் தியரே காண்பீர்!

பெறுமதி வாய்ந்த பேச்சில்
பெருவழி காட்டும் ஏச்சில்
உறுதியாய் நின்றே நல்ல
உணர்வுகள் தம்மை ஊட்டி
அறிஞர்கள் பலரை ஆக்கி
அரங்கினில் ஏற்றி வைத்த
நெறிநிறைக் கனக செந்தி
நினைவினுல் நிறைந்தே நின்றார்!

பண்டித மணியை ஞானப்
பால்வார்த்த தாயே யென்று
எண்டிசை அறிய நாளும்
இதமுறச் செப்பி வந்த
தண்டமிழ் மணியே செந்தி!
சுசவுயர் நன்றி காட்டக்
கண்டுயாம் பயனே பெற்றோம்
காலமும் நினைவே காப்போம்!

சிறுகதை நாவல் நல்ல
சிரிய கவிதை செம்மை
அறிவுயர் நாடகங்கள்
ஆய்வுரை அனைத்துந் தந்தே
பெறுமதி பெருக்கி நின்ற
பேருயர் செந்தில் நாதன்
திறமறி திலக மாகத்
திகழ்ந்தனர்! நினைவே கூர்வோம்!

தெளிவுள வழியை விட்டுச்
சிக்கன வழியே யென்று
மொழிதனை முடக்கிக் கோர்த்து
முடுக்குகள் செய்வோ ருக்கு
ஒளிவிளக் கேற்ற நல்ல
உயர்வுறும் நூல்கள் தந்த
முழுமதி செந்தில நாதன்
மூத்ததோர் முத்தே காண்பீர்!

பேரவை கண்டே நல்ல
பேச்சினல் பெருமை கொண்டே
யாரிவர் என்றே கேட்க
இனியவர் இவரே யென்று
நேரினில் வாழ்த்துச் சொல்ல
நிறைமகனாக வாழ்ந்த
மாரியே மறைந்தோ ராண்டு
வந்ததே நினைவைத் தூண்ட.

— கவிஞர் வே ஐயாத்துரை.

## பதுக்கலும் கொள்ளை லாபமும்

வரவுசெலவுத் திட்ட மதிப்பீடு ஆட்சிமன்றத்தில் சமர்ப்பித்த உடனேயே அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைபற்றி வதந்தி கிளம்பிவிடும். இதைத் தொடர்ந்து பதுக்கலும் கொள்ளை லாபமும் அதிகரித்துவிடும்.

பொறுப்புள்ள சிலர் பொதுவைபவங்களில் தெரிவிக்கும் சில கருத்துக்களும் பதுக்கலுக்கும் கொள்ளை லாபத்துக்கும் வழிவகுக்கக் காரணமாக இருக்கின்றன

கோதுமைமாவின் உபயோகத்தைக் குறைக்க வேண்டுமென்றும் எரிபொருளைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டுமென்றும் சமீபத்தில் ஒருவர் ஒரு பொதுவைபவத்தில் பேசுகையில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

கடந்த சில தினங்களாக கோதுமைமாவும் சீனியும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பெருமளவில் கொள்முதல்செய்யப்பட்டுப் பல இடங்களில் பதுங்கிவிட்டன

கோதுமை மா பதுக்கப் பட்டதும் அரிசியின் விலையும் அதிகரிக்கத்தொடங்கியிருக்கிறது பெட்ரோலுக்கும் மண்எண்ணைக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

நமது நாட்டின் எரிபொருள் தேவையில் நாற்பது சதவீதமானது ஈரானிலிருந்தே வருகிறது. அங்கு இப்போது பெரும் அரசியல் நெருக்கடி ஏற்பட்டிருப்பதால் இங்கு வரவேண்டிய பெட்ரோலும் மண்எண்ணையும் தாமதித்திருக்கிறது. பெட்ரோல் மண்எண்ணைக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு இதுவே மூலகாரணம்: பெட்ரோல் மண்எண்ணை உபயோகத்தைச் சிக்கனப்படுத்த வேண்டியது தவிர்க்கமுடியாதது.

ஆனல் கோதுமை மாவுக்கும் சீனிக்கும் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு எவ்வித காரணமுமில்லை.

கொள்ளைலாபமடிக்கும் நோக்கத்துடன் கோதுமை மாவையும் சீனியையும் சிலர் பதுக்கிவைத்திருக்கிறர்கள்

பதுக்கலும் கொள்ளை லாபமும் சமூகவிரோதச் செயலாகும். இதை முறியடிக்கவேண்டியது அவசியம். அத்தியாவசிய உணவுப் பொருள்களைப் பதுக்கி வைப்பவர்களையும் கொள்ளைலாபமடிப்பவர்களையும் பொதுமக்கள் காட்டிக்கொடுக்கத் தயங்கக் கூடாது. இவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டியதும் அவசியமாகும்!

## மணிவாக்கு

முதலில் கடவுளைத் தேடி, பிறகு உலகப் பொருளைத்தேடு இதற்கு மாறுகச் செய்யாதே. ஆத்மஞானத்தை அடைந்த பிறகு நீ உலக வாழ்க்கையில் ஈடுபட்டால் உனக்கு மனச்சஞ்சலமே இராது

—பகவான் ராமகிருஷ்ணர்.

# லண்டனில் திருமதி காந்திக்கு இந்தியர்கள் முட்டை வீசினர்

## கூட்டம் குழம்பியது; பின்கதவால் இந்திரா வெளியேறினர்!

லண்டன் நவ. 15 முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி லண்டனில் நேற்றுகலந்துகொள்ள இருந்த கூட்டத்தை லண்டனில் இருக்கும் இந்திய சமூகத்தவர் சிலர் முட்டைகளை வீசி குழப்பினர்

இதையடுத்து திருமதி காந்தி பின்கதவால் கூட்ட மண்டபத்தை விட்டு அழைத்துச் செல்லப்பட்டார். கூட்டம் நடைபெறவில்லை.

இந்தியர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் மேற்கு லண்டனில் நடைபெற இருந்த கூட்டத்தில் கலந்துகொள்ள திருமதி காந்தி கூட்ட மண்டபத்திற்கு வந்தபோது அவரை நோக்கி முட்டைகள் வீசப்பட்டன.

இது இல்லாமலிருக்க லண்டனில் சுற்றுப்பிரயாணம் மேற்கொண்டிருக்கும் திருமதி காந்தி பிரிட்டிஷ் பிரதமர் திரு ஜேம்ஸ் கலகன், எதிர்க்கட்சித்தலைவி திருமதி மார்க்ரெட் தட்சர், மெனண்ட் பேட்டன் பிரபு ஆகியோரை சந்தித்து பேச்சு நடத்தினர் [இ]

## எகிப்து - இஸ்ரேல் அமைதிப் பேச்சு:

### எகிப்திய உபஅதிபர் அமெரிக்கா சென்றார்

கெய்ரோ, நவ. 15 மத்தியகிழக்கு விவகாரம் குறித்து தடைப்பட்டுள்ள இஸ்ரேல் — எகிப்து பேச்சு வார்த்தைகளை மீண்டும் தொடர்ந்து நடத்துவது தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமுகமாக அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டருடன் பேச்சு நடத்துவதற்கு எகிப்திய உப அதிபரை ஜனப் அன்வர் சதாத் அமெரிக்காவுக்கு அனுப்பியுள்ளார்.

ஜனப் சதாத்தின் விசேஷ செய்தியுடன் உபஜனாதிபதி ஜனப் முபாரக் அமெரிக்கா சென்றுள்ளார்.

இதேவேளையில், ''இஸ்ரேல்—எகிப்து சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப் படவேண்டுமானல் 'காஸா' பள்ளத்தாக்கு பிரதேசத்தை யாவது இஸ்ரேல் எகிப்துக்கு விட்டுக்கொடுக்கவேண்டும்' என்று எகிப்திய அதிபர் ஜனப் சதாத் தெரிவித்துள்ளார். (இ)

### வெள்ளத்தினால் ஒரு கோடி ரூபா சேதம்

சென்னை, நவ. 15 கோயம்புத்தூரில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்ட சேதம் ஒன்றரைக் கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

வெள்ளப்பெருக்கினால் இம் மாவட்டத்தில் 6042 குடிசைகள் சேதமடைந்தன என்றும் தெரிவிக்கப்பட்டன. (இ)

## ஈரானில் வேலை நிறுத்தம்; ஆர்ப்பாட்டம் தொடர்கிறது!

தெஹ்ரான், நவ. 15 ஈரானில் வேலைநிறுத்தம் செய்துவந்த எண்ணை ஊழியர்கள் தமது வேலைநிறுத்தத்தைக் கைவிட்டுவிட்டனர் என்று தெஹ்ரான் வானொலி அறிவித்துள்ளபோதிலும் வேலைநிறுத்தம் நடைபெற்று வருவதாக அங்கிருந்து கிடைக்கப்பெற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

மிகப்பெரும் எண்ணை உற்பத்தி நகரங்களில் ஒன்றான அபடான் நகரில் ஊழியர்கள் ஒருவர் கூட வேலைக்குத் திரும்பவில்லையென்று அறிவிக்கப்பட்டது.

ஒருவார அமைதிக்குப் பின்னர் நேற்றுப் பல இடங்களிலும் கலவரங்கள் மூண்டதாகவும், ஆயுதப்படையினர் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

### நினைவுதினமும் வருடாந்தக் கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

யாழ். இலக்கியவட்ட வருடாந்தப் பொதுக்கூட்டமும், இரசிகமணி நினைவு தினமும், இன்றுமாலை காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

விழாவிற்கு கவிஞர் வி. கந்தவனம் தலைமைவகிப்பார் வரவேற்புரையை கலைப்பேரசு ஏ. ரி. பொன்னுத்துரையும், தொடக்கவுரையை நடேஸ்வராக் கல்லூரி அதிபர் திரு பொன். சோமசுந்தரமும் வழங்குவர். ''இரசிகமணி கனக செந்திநாதன் நினைவுகள்'' என்னும் தலைப்பில் யாழ் வளாக தமிழ்த்துறை விரிவுரையாளர் திரு. தா சுப்பிரமணியம் சிறப்புரையாற்றுவார். (கெ)

## அமரர் நேருவை குழந்தைகள் உதாரணமாகக் கொள்ள வேண்டும்

### குழந்தைகள் தினத்தில் ஜெயப்பிரகாஷர்

பட்னா, நவ. 15 இந்தியத்தவப்புதல்வர்களில் ஒருவரான அமரர் ஜவஹர்லால்நேருவை நமது குழந்தைகள் உதாரணமாகக்கொண்டு வாழவேண்டும்.

இவ்வாறு இந்திய சர்வோதயத் தலைவர் திரு ஜெயப்பிரகாஷ் நாராயண் கூறினர்.

ஜவஹர்லால் நேருவின் பிறந்ததின விழாவையொட்டி நேற்று தமது இல்லத்தில் நடைபெற்ற குழந்தைகள் தினவிழாவில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

இந்திய விடுதலைக்கு அமரர் நேரு உன்னத தியாகங்கள் புரிந்ததுடன் ஏழைகளுடன் தம்மையும் ஈடுபடுத்தி உதாரணபுருஷராக வாழ்ந்து காட்டினர் என்றும் திரு. ஜெயப்பிரகாஷ் கூறினர். (இ)

### மனிதர்கள் ஏற்படுத்திய பேரழிவு!

சென்னை, நவ. 15 ''தமிழ்நாட்டில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம், மண்சரிவு ஆகியவற்றுக்குக் காரணம் இங்குள்ள மரங்களை இயற்கைக்கு விரோதமாக பெருமளவில் வெட்டியதே ஆகும்.''

இவ்வாறு தமிழ்நாடு நிதி அமைச்சர் திரு நாஞ்சில் மனோகரன் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார். ''இது மனிதர்களினாலேயே ஏற்படுத்தப்பட்ட பேரழிவு'' ஆகும் என்றும் திரு. மனோகரன் தெரிவித்தார். (இ)

### காலராவுக்கு மூவர் பலி!

சென்னை, நவ. 15 சென்னையில் காலரா நோய் வெகுவேகமாகப் பரவிவருகிறது என்றும் இந்நோய்க்கு இதுவரை மூன்றுபேர் பலியாகிஉள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### கப்பம் பெற்றனராம்

(வவனியா)

யாழ்ப்பாணத்தை சேர்ந்த லொறி ஒன்றை ஓமந்தையில் மறித்து 10 ரூபா கப்பம் பெற்றதாக லொலிசாரதி இராசையா தருமலிங்கம் என்பவர் வவனியா பொலிசில் புகார் செய்ததைத் தொடர்ந்து ஸ்தலத்துக்கு சென்ற வவனியா பொசார் ஓமந்தையில் வைத்து நால்வரை கைது செய்துள்ளனர். இருவரை பொலிசார் தேடுகிறார்கள்.

### இடமாற்றம்

(கம்பளை)

கம்பளை பொலிஸ் நிலையத்திலிருந்து 13 பொலிஸ் கான்ஸ்டபிள்களும் 3 பொலிஸ் சார்ஜன்ட்களும் இடமாற்றம் பெற்றுள்ளனர்

அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இவர்கள் தங்களுக்கு கிடைத்த புதிய இடங்களில் கடமையைப் பொறுப்பேற்பர்.

## நாயன்மார்கட்டு சங்கக்கிளை மூடப்படும்

(நாயன்மார்கட்டு)

யாழ்ப்பாணம் மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நாயன்மார்கட்டு 37-ம் இலக்க கிளையை மூடிவிடுவதென இயக்குநர்சபை முடிவு செய்துள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர்சபைக் கூட்டம் சபைத்தலைவர் எம். ஆலாலசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நாயன்மார்கட்டுக் கிளையை மூடிவிடுவதென்று தீர்மானிக்கப்பட்டது.

இக்கிளையில் முன்னர் 650 கூப்பன்கள் இருந்தன. தற்போது 300க்குக் குறைந்த கூப்பன்களே உள்ளன. இக்கிளையினை மூடி, அரியாலை கிழக்குக் கிளையுடன் இணைக்கப்படவுள்ளது. இதனை நாயன்மார்கட்டு சனசமூக நிலையமும் பல்வேறு கழகங்களும் எதிர்க்கின்றன. (க)

## ''திருமுறைகளால் பயன்பெறுவோம்''

(யாழ்ப்பாணம்)

''ஈழத்தில் திருமுறை வளர்ச்சிக்கு சிவபாலனார் செய்து வரும் பணி மிகவும் போற்றற்குரியது. திருமுறைகள், வேண்டும் பயன்கொடுக்கும் மந்திரங்களாகும். இவற்றை நாளும் ஓதி நலம்பெறவேண்டும்''

இவ்வாறு அளவெட்டி கும்பிழாவளைப் பிள்ளையார் கோவில் ஐப்பசிக் கடைசி வெள்ளித் திருவிழாவன்றிரவு நடைபெற்ற பண்ணிசைக் கலாநிதி எஸ். கே. சிவபாலனின் தேவார இன்னிசைக் கச்சேரிக்குத் தலைமைதாங்கி உரையாற்றிய மேற்படி ஆலய நிர்வாகசபைத்தலைவர் சைவப் பெரியார் திரு எஸ். மயில்வாகனம் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தமதுரையில், ''பி. ஏ. எஸ். இராசசேகரனின் மாணவர் வரிசையில் இவர் முறையாகப் பயின்ற முதன்மாணாக்கராக திகழ்வது குறித்து நாம் பெருமைப்படுவதாகவும், திருமுறைகளைப் பக்தியோடு உணர்ச்சிததும்பப் பாடும் இவரின் இசைத்திறனும் பணியும் மேலும் வளர்ந்து பலனளிக்கவேண்டும் என்றும் கூறினர். ஆலய தொண்டர்சபை செயலாளர் எஸ். தயாபரன் நன்றிகூறினர்.

## இன்றைய இராசிப்பலன்

ஐப்பசி மாதம் 30-ந் திகதி வியாழக்கிழமை (16-11-78)

மேடம்:— கருடப்பார்வை உங்களை வட்டமிடும், எதிர்பாராதமுறையில் பொருட்செலவுக்கு இடமுண்டு தொழில் துறையிலும் சிறிது மனக்கசப்பு தென்படும்.

இடபம்:— இனிக்கப் பேசுவோர் விடயத்தில் எச்சரிக்கையுடன் இருக்கவும். பிறந்தகத்தின் நினைவு தலைதூக்கும் கடமையில் சோர்வு தென்படும். மடத்திடம் வேண்டும்

மிதுனம்:— இன்று அருளும் பொருளும் இணைந்து கிடைக்கும். தொழில் புரியும் இடத்தில் பாராட்டப் படுவீர்கள் சிறப்பான தினம்.

கடகம்:— தற்பெருமை மூலம் தடுமாற்றம் தென்படும். கண்துடைப்பு வேலைகள் நடைபெறும் கவனம் செலுத்தவும்பொறுமைநன்று

சிங்கம்:— காரியத்தில்வெற்றியுண்டு. தாய்வழி ஆதரவு கிடைக்கும். புதிய தொழில்களில் ஆர்வம் பிறக்கும்.

கன்னி:— இதயக்கமலம் இன்பத்தால் மலரும் கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும் புத்திரர் புகழ் போன்றத்தக்க முன்னேற்றத்தைக் கொடுக்கும்.

துலாம்:— நீண்டநாள் உறவில் முறிவு ஏற்படலாம். கடமையாற்றுமிடத்தில் எதிரிகள்

விருச்சிகம்:— குடும்ப வழியால் நிம்மதி பிறக்கும். காதல் விவகாரங்களுக்கும் இடமுண்டு. சிறப்பான தினம்.

தனுசு:— கடற்றொழிலாளர்கள் கவனம் செலுத்திவரவும். உடல் நிலையும் பாதிக்கப்படலாம், சுகாதாரத்தை பேணி நடக்கவும்.

மகரம்:— தரும காரியங்களில் தாராளமாக ஈடுபடுவீர்கள், சுற்றுடலில் மதிப்பு உயரும், பிதா வழி ஆதரவிற்கும் இடமுண்டு.

கும்பம்:— முயற்சியால் முன்னேற்றமுண்டு பப்பரப்போற்கழன்று பணியாற்றுவீர். தொழில் துறையிலும் இடமாற்றத்திற்கிடமுண்டு.

மீனம்: உழைப்பினுல் முன்னேற்றம் கிடைக்கும் வியாபாரத்துறையில் விருத்திக்கிடமுண்டு. பெரியோர் ஆதரவிற்கும் இடமுண்டு.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## வணிகமாணவ மன்றம் கவலை

(புலோலி)

யாழ். பல் தொழில் நுட்பக்கல்லூரியில் 1977-ம் ஆண்டிற்கான நூன சித்திப் பரீட்சை இதுவரையும் நடைபெருதது குறித்து யாழ். பல் தொழில் நுட்பக்கல்லூரி வணிகமாணவமன்றம் கவலை தெரிவித்துள்ளது.

இத்தொழில் நுட்பக்கல்லூரிகளின் முதலாம் வருடப் பயிற்சி நெறிப்பரீட்சை முடிவுகள் வெளியாகி ஒருவருடகாலமாகியும் நூனசித்தி பெற்றவர்கள் தமது சித்தியைப் பூரணத்துவப படுத்துவதற்கான நூனசித்திப் பரீட்சை நடாத்தப்படாமல் இருப்பதனால் பிரஸ்தாப பயிற்ச் நெறிமாணவர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

இறுதிப்பரீட்சை அண்மித்து விட்டதால் உடனடியாக நூனசித்திப் பரீட்சையை நடாத்துமாறு வணிகமாணவ மன்றச் செயலாளர் கோரியுள்ளார்.

## 200 ரூபா அபராதம்

(கொடிகாமம்)

சட்ட விரோதமாக சாராயம் விற்றதாக குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் தேநீர் கடை உரிமையாளர் ஒருவருக்கு 200 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இவ் வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதவான் பொன்னுண்டோ முன்னிலையில் எடுக்கப்பட்டபோது, எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதை தொடர்ந்து தீர்ப்பு வழங்கப்பட்டது (க)

# இடமாற்றங்கள்

(புலோலி)

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள தும்பளை கிராமசேவை அலுவலர் திரு. எம். அம்மையப்பிள்ளை அம்பன் பகுதிக்கும் அம்பன் கிராமசேவை அலுவலர் திரு. சேதுநாயகம் தும்பளை பகுதிக்கும் கெருடாவில் கிராமசேவை அலுவலர் திரு நடேசபிள்ளை அல்வாய் மேற்குப்பகுதிக்கும், அல்வாய் மேற்குகிராமசேவைஅலுவலர் திரு. இராசேந்திரம் கெருடாவில பகுதிக்கும் இடாமாற்றம் பெற்றுள்ளனர்.

# வீதி திருத்தப்பட்டது

[நெல்லியடி]

கரணவாய் பொலிகண்டி வீதி சுமார் 42,000 ரூபா செலவில் திருத்தி அமைக்கப் பட்டுள்ளது.

# ஆசிய பாடசாலே உதைபந்தாட்டம் இலங்கையில் நடைபெறும்

## டிசம்பரில் 16-ந் திகதி ஆரம்பமாகும்

(யாழ். விளையாட்டு நிருபர்)

ஆசிய பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடாத்தும் 18 வயதிற்கு உட்பட்டோருக்கான உதைபந்தாட்டப் போட்டி அடுத்த மாதம் 16ம் திகதி முதல் 22ம் திகதிவரை இலங்கையில் நடைபெறும்.

இலங்கையில் முதல்தடவையாக நடைபெறும் இப்போட்டியில் பதினொரு ஆசிய நாடுகள் பங்குபற்றுகின்றன.

இந்த உதைபந்தாட்டப் போட்டிக்கு வடபகுதி பாடசாலை வீரர்களை இலங்கைப் பாடசாலை உதைபந்தாட்டச் செயலாளர் திரு. பி. ராஜரத்தினம் திரு. வி. கே. ஆறுமுகம் ஆகியோர் தெரிவு செய்தனர்.

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இலங்கை இளைஞர் உதைபந்தாட்டப் பயிற்சியாளர் திரு. வி. நடராஜாவின் மேற்பார்வையில் நடைபெற்ற பயிற்சியின்போதே இவ்வீரர்களைத் தெரிவுசெய்தனர். இவர்கள் மீண்டும் இம் மாதம் 18ம், 19ம் திகதிகளில் கொழும்பில் நடைபெறும் தெரிவுப்போட்டியில் ஆடிய பின்னர் இறுதியாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

### யழ். பாடசாலே வீரர்கள்

இப்போட்டிகளுக்காகயாழ்ப்பாணப் பாடசாலைகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட வீரர்களின் பெயர்கள் பின்வருமாறு:

எஸ். மகேந்திரா, எஸ். இன்பவடிவேல், ஆர். சகாதேவன், வி. ரதிகுலன், என். வேணுகோபால் (யூனியன் கல்லூரி) என். இராசேந்திரன் (கொக்குவில் இந்துக்கல்லூரி) ஏ. டபிள்யூ. லாபீர் (ஒஸ்மானியாக்கல்லூரி), ஜி. குணசீலன், வி. கலாமோகன், கே. அழகரத்தினம் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), கே. விஜயகுலசிங்கம் (யாழ். இந்துக்கல்லூரி) ஜே. எம். இரவீந்திரகுமார் விக்ரோறியாக்கல்லூரி), ஆர். திருநாவுக்கரசு (மானிப்பாய் இந்துக்கல்லூரி).

# விபுலாநந்தருக்கு பின்......

(அரியாலே)

''முத்தமிழ் வித்தகராகவும், சிறந்த சமூகசேவையாளராகவும் திகழ்ந்தவரும் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக கிழக்கிலங்கையில்தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக உழைத்த வருமான புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையின் திடீர் மறைவு தமிழ்பேசும் நல்லுலகுக்கு ஈடுசெய்யமுடியாதபெரு நஷ்டமாகும்.''

இவ்வாறு அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின் பொதுச் செயலாளர் திரு. எஸ். பி. ஜீவானந்தம் புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளையின் மறைவுகுறித்து வெளியிட்டுள்ள அனுதாபச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

''யாழ். நூல் ஆசிரியர் சுவாமி விபுலா நந்தருக்குப் பின்னர் கிழக்கிலங்கையில் தமிழ்மொழிக்குச் சேவையாற்றிய பெருந்தகை புலவர்மணி அன்னரது தமிழ்த்தொண்டை தமிழ்பேசும் நல்லுலகம் என்றும் மறக்காது'' என்று அச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது, (அ)

# உதைபந்தாட்டம்

### ஸ்கந்தா வெற்றி

(யாழ். விளையாட்டுநிருபர்)

யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச்சங்கம் பாடசாலைகளுக்கு இடையில்நடத்திவரும்உதைபந்தாட்டப்போட்டியில் 2ம், 3ம் பிரிவுகளுக்கு இடையே நடைபெற்ற கால் இறுதியாட்டத்தில் வெற்றி பெற்ற கல்லூரிகள் பின்வருமாறு:

ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் அருணோதயாக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற 3ம் பிரிவுக்கான உதைபந்தாட்டப்போட்டியில் இறுதிவரை எக்கோஷ்டியும் கோல்கள் போடாததினால் இவர்கள் வெற்றியை நிர்ணயிப்பதற்காக நடுவர் 5 'பெனல்டி' உதைகளைக் கொடுத்தார். அதில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 4 கோல்களையும், அருணோதயாக்கல்லூரி 2 கோல்களையும் போடவே ஸ்கந்தவரோதயாக்கல் லூரி 4-2 கோல்களால் வெற்றியீட்டியது.

### மானிப்பாய் இந்து வெற்றி

2ம் பிரிவுப் போட்டியில் மானிப்பாய் இந்துக்கல்லூரி தெல்லிப்பழை யூனியன் கல்லூரியை 1-0 கோல்களால் வெற்றியீட்டியது.

### சென்றல் வெற்றி

3ம் பிரிவில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியை எதிர்த்து யாழ். மத்தியகல்லூரிவிளையாடியபோது இரு கோஷ்டிகளும் தலா ஒரு கோலைப்போட்டதால் நடுவர் 5 பெனல்டி உதைகளைக்கொடுக்க யாழ். மத்திய கல்லூரி 3-2 கோல்களால் வெற்றியீட்டியது.

### மானி. இந்து வெற்றி

அதேபிரிவில் நடேஸ்வராக் கல்லூரியை எதிர்த்து மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆடியபோது இரு கல்லூரிகளும் எதுவித கோலகளையும் போடாததால் நடுவர் 5 பெனல்டி உதைகளைக் கொடுக்க 3-1 கோல்களால் மானிப்பாய் இந்துக்கல்லூரி வெற்றியீட்டியது.

### யாழ். இந்து வெற்றி

2ம் பிரிவில் கொக்குவில் இந்துக்கல்லூரியை யாழ். இந்துக் கல்லூரி 1-0 கோல்களால் வெற்றியீட்டியது.

### உரும்பராய் வெற்றி

3ம் பிரிவில் உரும்பராய் இந்துக்கல்லூரி 2-1 கோல்களால் விக்ரோறியாக் கல்லூரியை வெற்றியீட்டியது.

### மானிப்பாய் இந்து வெற்றி

2ம் பிரிவில் மானிப்பாயஇந்துக் கல்லூரி 1-0 கோலால் நடேஸ்வராக் கல்லூரியை வெற்றியீட்டியது.

அதே பிரிவில் மகாஜனக்கல்லூரி 1-0 கோலால் ஸ்கந்தவரோதயாக்கல்லூரியை வெற்றியீட்டியது.

# பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம்

(கொழும்பு)

பாவனையாளர் பாதுகாப்பு சட்டத்தை வர்த்தக கப்பல் துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி நேற்றுக்காலே பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

உள்நாட்டு வர்த்தக ஒழுங்குகளைக்கவனித்து பாவனையாளர்களைப் பாதுகாக்கவே இச்சட்டம் கொண்டுவரப் பட்டுள்ளது.

இச்சட்டத்திற்கமைய உள்நாட்டுவர்த்தக ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு பொருட்களின் இறக்குமதி பாவனை விநியோகம் ஆகிய துறைகளை ஆணையாளரிடம் ஒப்படைக்கப்படும். (இ)

# விதை உருளைக்கிழங்கு விநியோகத்தில் மந்தநிலே

(சங்கானே)

சாலபோகத்திற்கான விதை உருளைக்கிழங்கு விநியோகத்தில் மந்தநிலை ஏற்பட்டுள்ளதாம். இதன் காரணமாக வெளி நாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட ''ஆக்கா'' இன விதை கிழங்கை புகையிரத நிலையத்திலிருந்து அவ்வப்பகுதி கமச்சேவை நிலையத்தார் எடுத்துச் செல்வதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதெனத் தெரிய வந்துள்ளது.

மேலும் வட பகுதிக்கு வர வேண்டிய ''டிசிறி'' எனப்படும் விதை கிழங்கினத்தை அனுப்பவேண்டாமென்ற அவசர செய்தியொன்றும் கமச்சேவைப்பகுதி உத்தியோகத்தரால் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாம்.

இத்தனைக்கும் காரணம் விதை கிழங்கு ஒருபோதும் இல்லாதவகையில் விலையேறிய தனாலே விவசாயிகள் இந்தச் செய்கையில் ஈடுபட ஏற்பட்டுள்ள தயக்கமே எனக் கூறப்படுகிறது. (உ)

# வேகமாகப் பரவும் கண்நோய்

(வவனியா)

வவனியாவில் கண்நோய் வேகமாகப் பரவிவருகிறது இதனுல் இங்குள்ள பாடசாலை மாணவர்களும் விவசாயிகளும் மிகுந்தபாதிப்புக்குள்ளாகியுள்ளனர் பரீட்சை நெருங்கி வருவதால். மாணவர்கள் பெரிதும் அச்சம்அடைந்துள்ளனர்.

# தொலேபேசிச் சீர்கேடு 'தொடர்கதை' யாகிறது

(புலோலி)

அண்மையில் ஏற்பட்ட கடும் மழை காரணமாக வடபகுதியில் பாதிப்புக்குள்ளான தொலைபேசிச் சேவைகள் இன்னமும் சீரடையவில்லை.

இதனுல் தொலைபேசிச் சேவையில் தொடர்புகொள்வோர் உட்பட தந்திமூலம் செய்திகள் அனுப்புவோரும் மிகவும் சஷ்டமனுபவிக்க வேண்டியுள்ளது.

# உன்னிச்சையில் புதிய பாடசாலே

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு முதல் எம். பி திரு. செ. இராசதுரை உன்னிச்சையில் புதிய பாடசாலைக் கட்டிடமொன்றுக்கும் மட்டுநகரில் வன்சன்ற் மகளிர் கல்லூரியில் இரண்டு மாடிக் கட்டிடமொன்றுக்கும் அத்திவாரக்கல் நாட்டினர்.

மண்முனே மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். சொர்ணவடிவேல் தலைமையில் மகிளவட்டவானில் தையல் பயிற்சிநிலையமொன்றையும் திரு. இராசதுரை திறந்துவைத்தார்.

# 10 கோடி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தென்றும் இப்பகுதிப் பாடசாலை மாணவர்களைக் கொண்டு புள்ளி விபரங்கள் சேகரிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது. [க]

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
முத்துராமன்-சுஜாதா
முத்தான முத்தல்லவோ

நாகம்ஸ்
(சுன்னுகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
ஜெய்சங்கர் - லக்ஷ்மி
பெண் தெய்வம்

Rio (Jaffna)
Daily 4 Shows
ENDLESS NIGHT
MISTERY
From 17th
KIDNAPPEO

மனேகரா [யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-ஜெயலலிதா-ஸ்ரீகாந்த்
சுகுமாரி நடித்த
கணவன் மனைவி

தினசரி 4 காட்சிகள்
ராணி [யாழ். நகர்]
எஸ். எஸ். ஆர்- விரப்பா நடித்த
சிவகெங்கைச் சீமை

REGAL (Jaffna)
NOW SHOWING
Daily at, 4-30, 7-00&9-30 p.m,
Sidney James, Kenneth Williams
in
'CARRY ON MATRON'
(Color)

SHANTHI JAFFNA. Phone: 7642
Daily 10-30, 2-30, 6-30, 9-45.
Irangani... Sera Singha...
— Sinhalese — சிறந்த சிங்களப் படம் —
"Janaga Saha Manju"
Screening Shortly "Blood Money"

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
15-ந் திகதி முதல் 20 வரை
எஸ். எஸ். ஆர். — மைனவதி, பாலையா, தங்கவேலு நடித்த
கல்யாணிக்கு கல்யாணம்

லிடோ (யாழ். நகர்)
போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
எங்கள் தங்க ராஜா

வின்ஸர் [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள் போன்: 466
3-வது ஜனத்திரள் வாரம்
சிவராம் சந்திரகலா தனரத்தினம் நடித்த
அநுராகம்

சிவாஜிகணேசன்
பைலட் பிரேம்நாத்
இலங்கை விஜயம்பற்றிய செய்திப்படம்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30 & 9-45
எம். ஜி. ஆர். --- சரோஜாதேவி நடித்த
திருடாதே [புதிய பிரதி]

இன்று மட்டும்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ராஜா (யாழ் நகர்)
மரிக்கார் ராமதாஸ்
ஹெலன் குமாரி
மற்றும்பலர் நடித்த சிறந்த ஹாஸ்ய திரைவிருந்து
ஏமாளிகள்

# "விசாரணை கோரிய சிறிமா வழக்குத் தொடர்ந்துள்ளார்!"

## ஜனாதிபதி ஜே.ஆர். கருத்து

(கொழும்பு)
''ஆட்சியாளர்களின் தவறுகளைப் பகிரங்கப்படுத்தி ஜனநாயக அமைப்பைத் தூய்மைப்படுத்த ஆணைக்குழு விசாரணைகள் மிகவும் அவசியம்''.

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார். பம்பலப்பிட்டி தொடர்மாடிகளில் வசிப்பவர்களின் சேமநலச் சங்கத்தினர் அளித்த வரவேற்பு வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே திரு ஜயவர்த்தனா மேற்கண்டவாறு கூறினார். திரு. ஜயவர்த்தனா மேலும் பேசுகையில் கூறியதாவது:-

விசேட ஜனாதிபதி ஆணைக்குழு தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றம் அளித்த தீர்ப்பை நாம் மதித்து ஏற்றுக்கொள்கிறோம். அதேநேரத்தில் விசேட ஜனாதிபதி ஆணைக்குழு சட்டத்தில் இருந்த குறைபாடுகளை சுட்டிக்காட்டியமைக்காக நீதிமன்றத்திற்கு நன்றிதெரிவிக்கிறேன்.

### திருத்தச் சட்டமூலம்

நீதிமன்றத்தீர்ப்பு இவ்வாறிருந்தபோதிலும் ஆணைக்குழு விசாரணைகளைத் தொடர்ந்து நடத்துவதற்காக பாராளுமன்றத்தில் திருத்தச்சட்ட மூலம் ஒன்று தாக்கல்செய்யப்பட உள்ளது.

### சிறிமாவோ கமிஷன் விசாரணை கோரினார்

முன்னாள் பிரதம மந்திரி திருமதி பண்டாரநாயக்காவின் காணி விவகாரம்குறித்து பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டபோது அவ்விவகாரம் குறித்து விசாரணை செய்ய ஆணைக்குழு ஒன்றை நியமிக்கவேண்டும் என்று திருமதி பண்டாரநாயக்காவே அப்போது கேட்டிருந்தார்.

அவரே இப்போது விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அதிகாரம் குறித்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது ஆச்சரியத்துக்குரியதாகும்.

ஜனாதிபதி ஆணைக்குழு தனிப்பட்டவர்கள்மீது வஞ்சம் தீர்ப்பதற்காக நியமிக்கப்படவில்லை. கடந்த ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற தவறுகளை பகிரங்கப்படுத்தவே இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

இன்றைய ஆட்சியாளர்கள் தவறுசெய்யும்பட்சத்தில் அத்தவறுகள்பற்றி விசாரணைசெய்யவும் ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படும் என்று திரு. ஜயவர்த்தனா உறுதி அளித்தார். (இ)

---

## 'எண்ணை விலை உயர்வு தவிர்க்கமுடியாது'

ரியாத் நவ. 15
எண்ணை விலை உயர்வு தவிர்க்கமுடியாத ஒரு நடவடிக்கையாகும்.

இவ்வாறு சவூதி அரேபிய எண்ணை அமைச்சர் ஜனாப் ஷேக் ஜமானி தெரிவித்துள்ளார். [இ]

---

## சங்கக்கடையில் திருட்டு

[சங்கானை]
சங்கானை ப. நோ. கூ. சங்கத்தின் கீழ் இயங்கிவரும் வட்டுக்கோட்டை மேற்கு கிளையில் ஓடு பிரித்து திருட்டுநடைபெற்றுள்ளது. இரவுவேளை இந்தத் திருட்டு நிகழ்ந்துள்ளது

கிளை மனேஜர் திரு. கனகரத்தினம் செய்த புகாரைத் தொடர்ந்துசங்கானைபொலிஸ் சார்ஜன்ட் குலரத்ன விசாரணை நடத்திவருகிறார். (உ)

---

## சந்நிதி கோவிலுக்கு புதிய கடுகதி பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)
துணுக்காயிலிருந்து தொண்டமனாறுக்கு புதிய கடுகதி சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

துணுக்காயில் காலை 7-30 மணிக்கு புறப்பட்டு, கிளிநொச்சி, கொடிகாமம்,மாலிச்சந்தை வதிரி, நவிண்டில, உடுப்பிட்டி ஊடாக நண்பகல் 12 மணிக்கு தொண்டமனாறை வந்தடையும்.

தொண்டமானாறு செல்லச் சந்நிதி நண்பகல் பூசைக்கு செல்வோர் இந்த சேவையில் சென்று திரும்பலாம். பின் தொண்டமானாறில் நண்பகல் 1-30 மணிக்கு புறப்பட்டு அதே வழியாக துணுக்காயை அடையும்.

வவுனிக்குளம் தொட்டிபடியிலிருந்து தொண்டமனாறுக்கு மற்றொரு புதிய சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதிகாலை 5-15 மணிக்கு தொட்டியடியில் புறப்பட்டு கிளிநொச்சி, பரந்தன், சாவகச்சேரி, நுணுவில், மட்டுவில் புத்தூர், அச்சுவேலி வழியாக காலை 9-05 மணிக்கு தொண்டமனாறுக்கு செல்லும். தொட்டியடியில் நண்பகல் 12 மணிக்கு மற்றொரு பஸ் புறப்பட்டு இதே வழியாக தொண்டமனாறு செல்லும்.

இத்தகவல்களை கிளிநொச்சி டிபோ அத்தியட்சகர் திரு. ஸ்ரீஸ்கந்தராசா தெரிவித்தார். [க]

---

## பண்ணைக் கடலில் விளையாடிய முகிற்கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)
முகிற் கூட்டங்கள், பண்ணைக் கடலில் நீரை உறிஞ்சிய காட்சியை நேற்று நண்பகல் யாழ்ப்பாணத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் பார்த்து ரசித்தனர்.

கருமேகக் கூட்டத்திற்கும் பண்ணைக் கடலுக்குமிடையில், பெரும் 'வீதி' ஒன்று அமைக்கப்பட்டதுபோல் இக்காட்சி காணப்பட்டது!

நீரோ அல்லது நீராவியோ என நிச்சயமாகக் கூறமுடியாத நிலையில், வெண்ணிறப் புகைமண்டலமாக, கடலிலிருந்து வான் நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. நேற்று நண்பகல் ஒரு மணி முதல் ஒன்றரை மணிவரை இடம்பெற்ற இக்காட்சியை பெரியகடை, சந்திரத்துச்சந்தி, முற்றவெளி ஆகிய இடங்களிலிருந்து பெருந்திரளான மக்கள் பார்த்துக்கொண்டிருந்தனர் இதனால்அவ்வீதியில் சிறிது நேரம் போக்குவரத்து தடைப்பட்டது (க)

---

### சைக்கிளில் வந்து துப்பாக்கி முனையில்

## இளைஞர்கள் நடத்திய திகில் 'நாடகம்'

### ஸ்தலத்திலேயே ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)
''வீதியில் எவரும் தலைகாட்டக் கூடாது'' என்று எச்சரித்து ஆகாயத்தை நோக்கிச் சுட்ட அதேநேரத்தில் மோட்டார் சைக்கிள் "மெக்கானிக்" ஒருவரையும் ஆயுதந்தரித்த இளைஞர் கோஷ்டியொன்று தங்கள் சுழல்துப்பாக்கிக்கு இரையாக்கிய சம்பவம் சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்குச் சமீபத்தில் நடந்துள்ளது.

புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்ட 'கருஜ்பாலன்' என்று அழைக்கப்படும் பூபாலசிங்கம் என்பவரே (32 வயது) துப்பாக்கிக் குண்டுக்கு பலியானவராகும்.

நேற்று முன் தினம் இரவு 7-45 மணியளவில் சுன்னாகம் ரயில் நிலைய வீதியிலுள்ள சிவன் கோவிலடிக்கு சமீபத்திலுள்ள கருஜ்ஜுக்கு சுழல் துப்பாக்கிகளுடன நான்கு இளைஞர்கள் சைக்கிளில் சென்றதாகவும் இருவர் வெளியில் நின்று எச்சரித்து ஆகாயத்தை நோக்கிச் சுட்டார்களென்றும் இச்சம்பவம்பற்றிக் கூறப்படுகிறது

மற்றம் இரு இளைஞர்கள் சுழல் துப்பாக்கிகளுடன் கருஜ்ஜுக்குள் நுழைந்து அங்கு நின்ற பூபாலசிங்கத்தை அடுத்தடுத்து சுட்டுவீழ்த்திவிட்டு, சில நிமிட நேரத்தில் சைக்கிளில் ஏறி தலைமறைவாகிவிட்டார்களென்றும் இச்சம்பவம் பற்றி மேலும் கூறப்படுகிறது

பூபாலசிங்கம் இரத்தவெள்ளத்தில், கருஜில் இறந்து கிடக்கக்காணப்பட்டார் இளைஞர்கள் அவ்விடத்தை விட்டுச்சென்ற சில நிமிட நேரத்தில் அயலவர்கள் வந்து பொலிசாருக்கு அறிவித்ததாகக் கூறப்படுகிறது.

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு பெரேரா தலைமையிலான பொலிஸ்கோஷ்டி உடனடியாகச் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று விசாரணையை மேற்கொண்டது.

வீதிகளால் வந்த வாகனங்கள் பலத்த சோதனைக்குட்படுத்தப்பட்டபோதிலும், சந்தேகநபர்எவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை.

நான்கு இளைஞர்களும் நான்கு சுழல்துப்பாக்கிகள் வைத்திருந்தார்களென்றும், நால்வரும் 20 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்ட வயதினராக இருந்தார்களென்றும் அவர்கள் துரிதமாக செயல்பட்டார்களென்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திற்கான காரணம்பற்றி பொலிஸார் தீவிரமாக ஆராய்ந்துவருகின்றனர்

---

## சகல ஊழியர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
வங்கியிலிருந்து அல்லது ஒரு அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்திலிருந்து பெற்ற கடனைக் கொண்டு வீடு கட்டும் ஒருவர் எல்லா நிவாரணங்களுக்குமான தமது வருமானத்தின் மூன்றில் ஒரு பாகத்தினைக்கொண்ட உச்சஎல்லைக்குட்பட்ட தமது வருமானத்திலிருந்து திருப்பிச் செலுத்தப்பட்ட மூலதனத்தின் வட்டியையும் எதிர்காலத்தில் கழிக்கக் கூடியவராய் இருப்பார்.

### சமய நிறுவனங்கள்

சமய நன்கொடை நிறுவனங்களுக்கு வரிச்சலுகையளிக்கப்படும. இது 23 வீதத்தில் இருந்து 20 வீதமாகக் குறைக்கபபடும்.

மூலதனம் மீதான வரி மன்னிப்பு மூலம் கறுப்புப்பணத்தை வெளியில் கொண்டுவர விரும்புவதாக நிதியமைச்சர் அறிவித்தார். அரசாங்கத்துறை நிறுவனங்களுக்குப் பணம் வழங்குபவர்களுக்கு வரிச்சலுகை அளிக்கப்படும்.

### பற்றுச்சிட்டுக்கான முத்திரைக் கட்டணம்

20 ரூபாய்க்கு மேற்பட்ட தொகைக்குப் பற்றுச்சீட்டு வழங்கும் முறையை நீக்கி 100 ரூபாய்க்கு முத்திரைப் பற்றுச்சீட்டு முறை கொண்டுவரபடும்.

பட்ஜட்டில் பற்றுக்குறையாக உள்ள தொகையை உள்ளூர் கடன்கள்மூலமும், வெளி உதவிகள்மூலமும் இதரவகைகளாலும் சரிசெய்ய முடியும் என்று அமைச்சர் குறிப்பிட்டார். (ம)

---

## பஸ் திருப்பப்பட்டதாக புகார்

(வண்ணார்பண்ணை)
மண்டைதீவிலிருந்து யாழ்ப்பாணம் வந்த பிரயாணிகளை இடை நடுவில் இறக்கிவிட்ட இ. போ. ச. பஸ், பாதை மாறி திசைதிருப்பட்டதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை நடந்த இச்சம்பவம் பற்றி இ போ. ச. வட பிராந்திய தலைவருக்கு முறையீடு செய்யப்பட்டுள்ளது இந்த பஸ் பாதை மாறி திசை திருப்பப்பட்டபோது சாரதி, காப்பாளர் தவிர இரண்டு இ போ ச ஊழியர்கள் இந்த பஸ்ஸில் இருந்ததாக அந்தப் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை ஆறு மணிக்கு யாழ்ப்பாண பஸ் நிலையத்திலிருந்து மண்டைதீவு புறப்பட்ட இந்த பஸ் மண்டைதீவிலிருந்து யாழ்ப்பாணம் திரும்பியபோது யாழ்ப்பாணம் செல்லஇருந்த பிரயாணிகளை பண்ணைப் பாலத்தில் இறக்கிவிட்டு ஊர்காவற்றுறைப்பக்கமாக பஸ் திசைதிருப்பப்பட்டதாம் பிரயாணிகள் வாதாடிய போது பலவந்தமாக இறக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது. இந்த பஸ் திசை திருப்பப்பட்டதால், பஸ்சில் வந்த பிரயாணிகள் யாழ்ப்பாணத்திற்கு நடந்து வந்ததாகவும், திரும்பி வரும் பஸ்ஸுக்காக யாழ் பஸ் நிலையத்தில் காத்து நின்ற பிரயாணிகள் வாடகை வாகனங்களில் செல்ல நேர்ந்ததாகவும் அந்தப் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது

தனியான ஒரு சேவையில் ஈடுபடும் 781 பாதை இலக்க மண்டைதீவு பஸ்ஸுக்கே இந்தநிலை ஏற்பட்டது'

தீவுப்பகுதி பஸ் பிரயாணிகள் சங்க செயற்குழு உறுப்பினரும், மறுமலர்ச்சி இயக்க செயலாளருமான திரு சி. பாலசிங்கம மேற்படி முறையீட்டை இ போ. ச தலைவருக்கும் தீவுப்பகுதி பஸ் பிரயாணிகள் சங்கத் தலைவருக்கும் அனுப்பி வைத்துள்ளார். இதுபற்றி விசாரணை நடத்துமாறும் அப்புகாரில் கேட்கப்பட்டுள்ளது.

---

## இளஞ்சுடர் விளையாட்டு கழகம்

(முல்லைத்தீவு)
வட்டுவாகல் இளைஞர்கள் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் புதியதொரு விளையாட்டுச் சழகத்தை ஆரம்பித்தனர், புதிய சழகத்திற்கு 'இளஞ்சுடர் விளையாட்டுக் கழகம்' எனப் பெயரிட்டனர். இச்சழகததின் நிர்வாகிகளாக பின்வருவோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: திரு அ. சிவலிங்கம், உப-தலைவர்: திரு. ஆ தப்பிஜயா, காரியதரிசி: திரு. அ. சிவஞானசுந்தரம், உப-காரியதரிசியாக செல்வன் சோ. அழகேந்திரராசா, தனாதிகாரியாக திரு. செ. தங்கராசா, விளையாட்டுத் தலைவர்களாக செல்வன் ம. பத்மநாதன். பொ சங்கரலிங்கம் ஆகியோர் தெரிவாகினர். (உ)

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978ம் ஆண்டு நவம்பர் மாதம் 16ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, Telephone: 36?, Registered as a Newspaper in Sri Lanka.